கருத்தைச் சொன்னார்கள். இந்த தமிழகம் வளருவதில் மத்திய அரசாங்கம் விரும்பவில்லை என்று ஒரு கருத்தைச் சொன்னார்கள் இதை நான் ஏற்றுக்கொள்வதற்கு தயாராக இல்லை. காரணம் இந்த தமிழ்நாடு போல் பல்வேறு மாநிலங்கள் சேர்ந்ததுதான் இன்றையதினம் இந்திய துணைக்கண்டமாக இருக்கிறது. ஒரு மாநிலம் வளர்ச்சி அடைந்தால்தான் இந்திய துணைக்கண்டம் ஒட்டு மொத்தமாக வளர்ச்சி அடையும் என்பதிலே யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. அப்படி நாம் நினைக்கிற போது நிச்சயமாக மத்திய அரசாங்கம் இந்த மாநிலத்தை' நம்முடைய தமிழகத்தை எந்தவகையிலும் புறக்கணிக்க மாட்டார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அந்த அடிப்படையிலே நீங்கள் அத்தனை பேரும் சொல்லியிருக்கின்ற கருத்துக்களை பிரதிபலிக்கின்ற வகையிலே இந்த அரசு மத்திய அரசாங்கத்தை வல்யுறுத்தும் என்றும், இந்த ஆண்டு எப்படியும் சேர்த்தாக வேண்டுமென்று கேட்டுக்கொள்ள நம்முடைய உரிமையைப் பயனபடுத்துவோம் என்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) பேரவை அலுவல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவிற்கு இணங்க பேரவையின் அலுவல் கீழ்க்கண்டவாறு அமைக்கப்பட்டிருக்கிறது என்பதை பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்:

6-4-1982 செவ்வாய்க்கிழமை	மகாவீரர் பிறந்த தினம்—விடுமுறை.
7-4-1982 புதன்கிழமை	அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்தலும் நிறைவேற்றலும்.

1. தமிழ்நாடு 1982-ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு.
2. தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவுகள்.
3. தமிழ்நாடு 1982-ஆம் ஆண்டு பத்திரிகைப் பணியாளர்கள் நிவாரண நிதிச் சட்ட முன்வடிவு.
4. தமிழ்நாடு 1982-ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதி (திருத்த) சட்ட முன்வடிவு.
5. தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு பசுக்கள் வெட்டப்படுவதைத் தடுத்தல்—கால் நடை பாதுகாப்புச் சட்ட முன்வடிவு.

1982 ஏப்ரல் 5] [பேரவைத் தலைவர்]

தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 45/1980) (ஆய்வுக் குழு திருத்தி அமைத்தவாறு) அடுத்த கூட்டத் தொடரில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறும். அடுத்த கூட்டம் ஜூலைத் திங்களில் நடைபெறும். நாள் பின்னர் அறிவிக்கப்படும். பேரவையின் இந்தக் கூட்டம் 7-4-1982 அன்று முடிவடையும்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை, 7-4-1982-ந் தேதி காலை 9.00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.00 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

(9) பேரவை முன்வைக்கப் பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

162. தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு சாராய (தயாரித்தல்) விதிகளில்-சில திருத்தங்கள் செய்வது குறித்து 20-7-1981-ஆம் தேதியிடப்பெற்ற மதுவிலக்கு-ஆயத் தீர்வைத் துறையின் 126-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1937ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.)

163. தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு சாராய (சில்லரை விற்பனைக் கடைகள்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 10-12-1981-ஆம் தேதியிடப்பெற்ற மதுவிலக்கு-ஆயத் தீர்வைத் துறையின் 349-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.

164. தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு (சில்லரை விற்பனைக் கடைகள்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 15.12.1981-ஆம் தேதியிடப்பெற்ற மதுவிலக்கு-ஆயத் தீர்வைத் துறையின் 361-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1937-ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).